பக்கங்கள்: ஆறு

Registered as a Newspaper

உதயன்

விலை ரூபா 5-00

சுடர்: 7 திருவள்ளுவர் ஆண்டு 2023 மாசி 19 திங்கட்கிழமை (02-03-1992) UTHAYAN — A Lively National Tamil Daily கதிர்: 96

ஆனையிறவு சின்ன உப்பளத்தில்

2 காவலரண்கள் தகர்க்கப்பட்டன!

2 படையினரின் சடலங்களும் ஆயுதங்களும் மீட்கப்பட்டன

யாழ்ப்பாணம், மார்ச் 2

ஆனையிறவு சின்ன உப்பளப் பகுதியில் நிலைகொண்டிருந்த ஸ்ரீலங்காப் படையினர் மீது, விடுதலைப் புலிகள் நள்ளிரவு வேளை நடத்திய அதிரடித் தாக்குதலில் படையினரின் இரு காவலரண்கள் புலிகள் வசம் வீழ்ந்தன. இத்தாக்குதலில் உயிரிழந்த இரு படையினரின் சடலங்களையும் ஆயுதங்கள் மற்றும் இராணுவத் தளபாடங்களையும் விடுதலைப் புலிகள் கைப்பற்றினர்.

நேற்று அதிகாலை 12.45 மணியளவில் நடத்தப்பட்ட இந்த அதிரடித் தாக்குதல் சுமார் ஐந்து நிமிட நேரம் நீடித்தது.

கைப்பற்றிய இரண்டு காவலரண்களையும் புலிகள் பின்னர் தகர்த்தனர்.

தாக்குதலை அடுத்து அப்பகுதியிலிருந்த படையினர், உயிரிழந்த சிப்பாய்களின் சடலங்களையும், ஆயுதங்களையும்கைவிட்டு, விட்டு தப்பி ஓடினர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

காவலரண்களைத் தாம் இழந்ததையும், இரு சிப்பாய்கள் உயிரிழந்ததையும் இராணுவ வட்டாரங்கள் கொழும்பில் ஊர்ஜிதம் செய்தன.

[உ-எ-5-144-165]

மீட்கப்பட்ட ஆயுதங்கள்

ஆனையிறவு சின்ன உப்பளம் பகுதியில் நடத்தப்பட்ட தாக்குதலின்போது விடுதலைப் புலிகளால் மீட்கப்பட்ட ஆயுதங்களின் விவரம் வருமாறு:-

★ ரி 56 ரகத் துப்பாக்கி	— 2
★ அவற்றுக்குரிய மகசின்	— 9
★ ரி 81 ரகத் துப்பாக்கி மகசின்	— 5
★ ஏ. கே. எல். எம். ஜி. தொடர் ரவை	— 319
★ நடுத்தர ரவைகள்	— 1,800
★ ஜே. ஆர். கிரனேட்	— 4
★ கிளைமோர்கள்	— 2
★ அவற்றை வெடிக்க வைக்கும் சாதனம்	— 2
★ மற்றும் இராணுவத் தளபாடங்கள்	

[உ-5-144-165]

மூதூரில் நான்கு நாட்களில் 16 தமிழர்கள் கைதாகினர்

யாழ்ப்பாணம், மார்ச் 2

மூதூர் மாவட்டத்தைச் சேர்ந்த சம்பூர், கிளிவெட்டி, சீதரவெளி ஆகிய கிராமங்களில் கடந்த நான்கு நாட்களில் 16 தமிழர்கள் படையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

ஏற்கனவே மூன்று வார காலமாக படையினரின் சுற்றி வளைப்புக்குள் இருந்து பின்னர் விடுபட்டுள்ள இக்கிராமங்களில் படையினரின் கெடுபிடிகள் தொடர்ந்தும் இருந்து வருகின்றன என்று தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை — இங்குள்ள இறால் குழி என்னும் இடத்தில் படையினர் நடத்திய வன்முறைகளை அடுத்து அப்பகுதி மக்கள் அங்கிருந்து வெளியேறியுள்ளனர்.

(இ-5)

லில்லியில் பழுதடைந்த அரிசி: புறப்படுவதில் தாமதம்

யாழ்ப்பாணம், மார்ச் 2

பழுதடைந்த அரிசி ஏற்றப்பட்டிருந்தது கண்டுபிடிக்கப்பட்டதை அடுத்து லில்லி கப்பல் கொழும்பில் இருந்து புறப்படுவதில் தாமதம் ஏற்பட்டிருக்கிறது.

லில்லி கப்பல் இன்று பருத்தித்துறையை வந்தடையும் என எதிர்பார்க்கப்பட்டது. ஆனால் பொருள்கள் அனைத்தும் ஏற்றப்பட்ட பின்னர் அதில் ஏற்றப்பட்ட சுமார் 600 மெற்றிக் தொன் அரிசி பழுதடைந்தது என்பது சுட்டிக் காட்டப்பட்டதாம்.

இதனை அடுத்து அந்த அரிசியை இறக்கி விட்டு புதிதாக அரிசியை ஏற்றிக்கொண்டு தாமதமாகவே அது கொழும்பில் இருந்து புறப்படும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

(இ-5)

முச்சந்தி முரளி

[இன்று படம் பாக்கிறவைக்கு இது ஒரு எச்சரிக்கை பாருங்கோ.....!

இன்று சிவராத்திரி

யாழ்ப்பாணம், மார்ச் 22

இன்று சிவராத்திரி தினமாகும். இதனையொட்டி சிவன் ஆலயங்களிலும் ஏனைய ஆலயங்களிலும் நான்கு ஜாம பூசைகள், அபிஷேகங்கள் நடைபெறவுள்ளன.

சைவ மக்கள் இரவு முழுவதும் கண் விழித்து சிவன் வழிபாட்டில் ஈடுபடுவர். ஆலயங்களில் பாராயணங்கள், பஜனைகள், சமயசொற்பொழிவுகள் மற்றும் கலை நிகழ்ச்சிகள் போன்றவையும் இடம் பெறும்.

[ஒ-10]

மீண்டும் ஜே. வி. பி. செயற்பட அரசு அனுமதி அளிக்கும்?

ஐ. தே. கவுக்கு எதிரான வாக்குகளைப் பிரிக்கும் நோக்குடன் எதிர்வரும் தேர்தல்களில் ஜே. வி. பி. ஓர் அரசியல் கட்சியாகச் செயற்பட அரசு அனுமதி அளிக்கலாம் என்று கொழும்புச் செய்தி ஒன்று தெரிவிக்கிறது.

தற்போது லண்டனில் தங்கி உள்ள ஜே. வி. பி. தலைவர் சோமவன்ச அமரசிங்காவுடன் இது தொடர்பாக பேச்சுவார்த்தை நடத்தும் முயற்சிகள் மேற்கொள்ளப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

ஜே. வி. பி. தலைவராக இருந்த ரோஹண விஜேவீராவின் மைத்துனரான டாக்டர் சுபாஷ் சந்திரா பெர்னாண்டோ என்பவரே லண்டன் செல்வக்கூடும் என்று கூறப்படுகிறது.

இதற்கிடையில் சோமவன்ச அமரசிங்க பி. பி. ஸியின் சிங்களச் சேவைக்கு அளித்த பேட்டி ஒன்றில் தமது கட்சி ஏற்கனவே பதிவு செய்யப்பட்ட ஓர் அரசியல் கட்சி என்று தெரிவித்துள்ளார்.

[இ-10]

வீடியோ படத்தால் வந்தது வினை: ஜெனரேட்டர் மின் தாக்கி இளைஞர் உயிரிழந்தார்

கந்தர்மடத்தில் நேற்றிரவு சம்பவம்

யாழ்ப்பாணம், மார்ச் 2

அரை கே. வி. வலுவுடையமிகச்சிறிய ஜெனரேட்டர் மின்சாரம் தாக்கியதில் நேற்றிரவு இளைஞர் ஒருவர் பரிதாபமாக உயிரிழந்தார் என்று தெரிவிக்கப்படுகிறது. வீடியோ படம் பார்க்கவே ஜெனரேட்டர் இயக்கப்பட்டதாகக் கூறப்பட்டது.

இச்சம்பவம் யாழ்ப்பாணம், கந்தர்மடம் மணல் தரை ஒழுங்கையில் இடம்பெற்றது.

மாணிக்கம் மனோகரன் (24 வயது) என்ற இளைஞரே உயிரிழந்தவர் ஆவார்.

ஜெனரேட்டரை இயக்க ஒருவர் முற்படும் நோக்கில், கயிறை இழுத்த சமயம்,

[6ஆம் பக்கம் பார்க்க]

குண்டு வீச்சுத் தாக்குதல்களுடன் முன்னேற முயலும் படையினருடன் வவுனியாவில் புலிகள் கடும் சண்டை

யாழ்ப்பாணம், மார்ச் 2

வவுனியா பகுதிகளில் இருந்து இரு முனைத் தாக்குதல்களை நடத்திவாறு முன்னேற முயன்று வரும் படை அணிகளை எதிர்த்து புலிகள் கடும் பதில் தாக்குதல்களை மேற்கொண்டுவருவதாக அங்கிருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன.

நேற்று முன்தினம் பகல் வேளை தரணிக்குளம் பகுதியில் நிலைகொண்டிருந்த படையினர் ஈச்சங்குளம் பகுதியை நோக்கி முன்னேறினர். முன்னேறும் படையினருக்கு உதவியாக இரு பொம்மர்களும், ஹெலிகளும் சமகாலத்தில் கடும் வான் தாக்குதலையும் நடத்தின.

அந்த அணி கருவேப்பன் குளம் பகுதியில் வைத்து புலிகளின் பலத்த தாக்குதலை எதிர்கொண்டது.

சுமார் ஒரு மணி நேரம் அப்பகுதியில் இடம்பெற்ற கடும் சண்டையின் போது படையினருக்கு பேரிழப்பு ஏற்பட்டிருக்கலாம் என தெரிவிக்கப்பட்டது.

அந்தப் பகுதியில் புலிகளால் முன்னரே புதைக்கப்பட்டிருந்த மிதி வெடிகளில் சிக்கிய படையினர் பலர் தமது கால்களை இழந்துள்ளனர் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை — வவுனியா மாவட்டத்தின் பல்வேறு பகுதி

[6ஆம் பக்கம் பார்க்க]

அம்பாறை பகுதி அகதிகளை வீடுகளுக்கு செல்ல பணிப்பு

நிவாரணம் நிறுத்தப்படும் என்றும் அச்சுறுத்தல்

கொழும்பு, மார்ச் 2

அம்பாறைப் பகுதிகளில் உள்ள தமிழ் மக்களை தத்தமது கிராமங்களுக்குச் சென்று குடியேறுமாறு அமைச்சர் பி. தயாரத்ன கேட்டுள்ளார்.

புனர்வாழ்வு, புனரமைப்பு, பி. தயாரத்ன அண்மையில் அம்பாறைப் பகுதி அகதி முகாம்களுக்கு விஜயம் செய்திருந்தார்.

அப்போது அகதிகள் எதிர்வரும் 15 ஆம் திகதிக்கு முன்னர் தமது சொந்தக் கிராமங்களுக்கு திரும்பி விட வேண்டும் என்றும் —

அத்திகதி வரை மட்டுமே உலர் உணவுப் பொருள் விநியோகம் செய்யப்படும் என்றும் அமைச்சர் குறிப்பிட்டார்.

அமைச்சரின் அறிவிப்பை அடுத்து இப்பகுதி அகதி முகாம்களில் உள்ள தமிழ் மக்கள் மத்தியில் குழப்பநிலை

(6ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

31 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

தோற்றம்: 16 — 9 — 1933

மறைவு: 1 — 2 — 1992

திருமதி வினாசித்தம்பி சிவகாமிப்பிள்ளை

தீதி: 2—3—1992

குலமகளாய், குடும்பத்தின் ஒளிவிளக்காய், அன்பின் இருப்பிடமாய், பண்பின் உறைவிடமாய் நீ இருந்தாய். பாசமுடன் காலமெல்லாம் எமை வளர்த்தாய். நேசமுள்ள உம் நினைவு, எம் நெஞ்சில் என்றும் நிலைத்திருக்கும்.

எம் குடும்பத் தலைவியின் இறுதிக் கிரியை, அந்தியேட்டி ஆகியவற்றில் கலந்து கொண்டு அஞ்சலி, ஆறுதல் தெரிவித்த அனைவருக்கும் மனமார்ந்த நன்றி யறிதலை தெரிவித்துக் கொள்கிறோம். இன்று (2-3-92) எமது வீட்டில் நடைபெறும் ஆத்மசாந்திக் கிரியைகளில் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கிறோம்.

கணவன், பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், சகோதரர்கள்.

உசன், மிருசுவில்.

(19884)

ஓராண்டு நினைவஞ்சலி

அமரர் கந்தையா இராஜரட்ணம்

[ஓய்வுபெற்ற பிரதம லிகிதர், பொலீஸ் திணைக்களம்]

தோற்றம்: 10 - 02 - 1923

மறைவு: 14 - 03 - 1991

திதி: அபரபக்க திரயோதசி (02 - 03 - 1992)

"நெடுநல் உளன் ஒருவன் இன்று இல்லை என்னும் பெருமை உடைத்து இவ் வுலகு"

அன்பின் பிறப்பிடமாய், பண்பின் உறைவிடமாய், எல்லோருக்கும் இன்முகம் காட்டி மறைந்த தங்களை, என்றும் இதயத்தில் இருத்தி நினைவு கூருகின்றோம்.

மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

"சந்திரசவாசா",
சபாபதிப்பிள்ளை வீதி,
உடுவில் கிழக்கு, சுன்னாகம்,

[19898]

வவுனியாவுக்கு புதிய அரச அதிபர்

கொழும்பு, மார்ச் 2

வவுனியாவின் புதிய அரசாங்க அதிபராக திரு. எஸ். தில்லைநடராசா கடந்த வெள்ளிக்கிழமை முதல் நியமிக்கப்பட்டுள்ளார்.

வடக்கு - கிழக்கு மாகாண சபையின் கல்வி கலாசார, விளையாட்டுத்துறை அமைச்சின் மேலதிகச் செயலாளராக, இவர் முன்னர் பணியாற்றி வந்தார்.

வவுனியா அரசாங்க அதிபராக முன்னர் கடமையாற்றி வந்தவர் திடீர் இடமாற்றம் செய்யப்பட்டார் என்றும் கொழும்புப் பத்திரிகைச் செய்திகள் தெரிவிக்கின்றன. [த-எ]

இன்றைய ஆட்டம்

நியூஸிலாந்து, மார்ச் 2

உலகக் கிண்ணத்துக்கான ஒரு நாள் கிரிக்கெட் போட்டியில் இன்று இலங்கை தென்னாபிரிக்காவை எதிர்த்து விளையாடும். இந்த ஆட்டம் நியூஸிலாந்தில் இடம்பெறும். [த]

கூட்டம்

யாழ்ப்பாணம், மார்ச் 2

வடமராட்சி உடல் ஊன முற்றோர் சங்கப் பொதுச் சபைக் கூட்டம் இன்று திங்கட் கிழமை காலை 10 மணிக்கு அல்வாய் சதாபொன்ஸ் கல்வி நிலையத்தில் நடைபெறும். [த]

வவுனியா-கொழும்பு இரவு ரயில் சேவை ஆரம்பம்

கொழும்பு, மார்ச் 2

வவுனியாவுக்கான இரவு தபால் ரயில் சேவை கடந்த வியாழக்கிழமை ஆரம்பமானது. தினசரி இரவு 11மணிக்கு கொழும்பு கோட்டையிலிருந்து புறப்படும் இந்த ரயில் மறுநாள் அதிகாலை வவுனியாவை வந்தடையும். இதேபோன்று வவுனியாவிலிருந்தும் கொழும்புக்கு இரவு தபால் ரயில் சேவை நடைபெறுகிறது: [ஒ-10]

புகையிலை அறுவடை ஆரம்பம்

தெல்லிப்பழை, மார்ச் 2

புகையிலை அறுவடை ஆரம்பிக்கப்பட்டுள்ளது. சில தோட்டங்களில் புகையிலைச் செடிக்கு நோய் கண்டதைத் தொடர்ந்து, போதியளவு விளைச்சல் இல்லாத போதிலும் கூட அறுவடை ஆரம்பிக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. [த-68]

டிப்ளோமா பயிற்சி நெறி 7ஆம் திகதி முதல்

யாழ்ப்பாணம், மார்ச் 2

தேசிய கல்வி நிறுவனத்தினால் நடத்தப்படும் கல்வி டிப்ளோமா பயிற்சி நெறி எதிர்வரும் 7 ஆம் திகதி காலை 10-30 மணியளவில் யாழ் இந்துக் கல்லூரியில் அமைந்துள்ள ஆசிரிய கல்வி மத்திய நிலையத்தில் ஆரம்பித்து வைக்கப்படும். இந் நிகழ்ச்சிக்கு வட பிராந்திய கல்விப் பணிப்பாளர் இ. சுந்தரலிங்கம் தலைமை வகிப்பார். யாழ். பல்கலைக் கழக கல்விப்புல பேராசிரியர் வ. ஆறுமுகம் பயிற்சி நெறியை ஆரம்பித்து வைத்து, ஆரம்ப உரை நிகழ்த்துவார்.

பயிற்சி நெறியில் யாழ்ப் பாணம், வவுனியா, மன்னார், முல்லைத்தீவு, கிளிநொச்சி ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த பயிற்சியாளர் கலந்துகொள்வர் [உ]

புங்குடுதீவு 6 ஆம் வட்டாரம்

இறுப்பிட்டி இளம் கலைஞர் நாடக மன்ற 3ஆம் ஆண்டு நிறைவு தினம்

இன்று 02-03-1992

இறுப்பிட்டி இளம் கலைஞர் நாடக மன்றம்

(19928)

ஏல விற்பனை

பாவனையிலுள்ள ஏசியா பெண்கள் துவிச்சக்கர வண்டி 16-3-1992 காலை 10 மணிக்கு புங்குடுதீவு-நயினாதீவு ப. நோ. கூ. சங்கம், 201/1, 3 ஆம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணத்தில் ஏல விற்பனை செய்யப்படும். இதனைக் காரியாலய நேரத்தில் பார்வையிடலாம்.

[சி-1632]

இலங்கை கணக்கீட்டு நியமத்துக்கான கருத்தரங்கு

யாழ் / தொழில் நுட்பக் கல்லூரியின் சரஸ்வதி மண்டபத்தில் 1992-03-02 [இன்று] காலை 9 மணிக்கு நடைபெற இருந்த மேற்படி கருத்தரங்கு 1992-03-18 ஆம் திகதி புதன்கிழமை காலை 9 மணிக்கு நடைபெறும் என்பதை தெரிவித்துக் கொள்கிறோம்.

[சி/1571] — அதிபர்.

தெய்வத்தின் பாதத்தில்

கடவுள் ஒரு கதையா?... தெய்வம் ஒரு திருவிழாவா?... இல்லை, சூரியனை ஆளுகிறவரும், சந்திரனை படைத்தவரும், உலகத்தை ஆளுகிறவருமான தெய்வம் இருக்கிறார். மனிதன் அவரது அரவணைப்பை இழந்து அருளற்ற பல யுத்தம், கலகம், பிரச்சினைக்கு ஆளாகின்றான். எனினும் எமது போராட்டத்தில் இறையருள் இருக்குமேயானால் சுட்டெரிக்கும் சூரியனைப் போல் மனிதனை நியாயம் தீர்க்கும். அதன் மூலம் விடுதலையைக் காணலாம். அதன் குறிக்கோளாகவும், நாட்டின் விடுதலைக்காகவும், தனிமனிதனின் விடுதலைக்காகவும் எமது 14ஆவது சுவிஷேச மகாநாடு நடைபெறவுள்ளது.

இடம்: ரட்ணம் விளையாட்டரங்கு, கொட்டாஞ்சேனை
[செல்லமஹால் படமாளிகைக்கு அருகில் கொழும்பு - 13]

காலம்: மார்ச் 08 முதல் 15 வரை மாலை 5-30 மணிக்கு

செய்தி: சகோதரர் செ. இராஜேந்திரம்

[19919]

புங்குடுதீவு - நயினாதீவு
பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம்

பதவி வெற்றிடம்

தேசிய பயிலுநர் கைத்தொழில் பயிற்சி அதிகார சபையின் திட்டத்தின் கீழ் பின்வரும் பயிலுநர்களுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

01. பொது இலிகிதர்.
02. களஞ்சிய இலிகிதர்.
03. கணக்கு இலிகிதர்.

பயிலுநர்களுக்கு பயிற்சிக் காலத்தில் மாதாந்தம் ரூபா 450/- வழங்கப்படும். எமது ஸ்தாபனத்தில் வெற்றிடம் ஏற்படும் பட்சத்தில் பயிற்சியாளர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

வயதெல்லை: 18 — 25

கல்வித் தகைமை: க. பொ. த. (சா.த.) சித்தி. தமிழ்மொழி, கணிதம் உட்பட ஆறு பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

விண்ணப்ப முடிவு திகதி: 10 - 03 - 1992

விண்ணப்பிக்கவேண்டிய முகவரி:

பதில் பொது முகாமையாளர்,
புங்குடுதீவு - நயினாதீவு ப. நோ. கூ. சங்கம்,
இல. 201/1, 3 ஆம் குறுக்குத்தெரு,
யாழ்ப்பாணம்.

மேற்படி சங்க எல்லைப்பரப்பில் உள்ள இரு பாலாரும் விண்ணப்பிக்கலாம்.

— பதில் பொது முகாமையாளர்.

[சி-1633]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நல்லூர் கோ நூலகம்
மாதகரட்சி மன்றம்
யாழ்ப்பாணம்

யாழ். மாவட்ட சிக்கன கடன் வழங்கு கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்தின்

10 ஆவது ஆண்டு தின சிறப்பு மலர்

1982 — **02 - 03 - 1992** — **1992**

ஒரு தசாப்த நிறைவு

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் சிக்கன கடன் வழங்கு கூட்டுறவுச் சங்கங்கள் ஆரம்ப காலங்களில் ஐக்கிய நாணய சங்கங்கள் என்ற பெயரில் உதயமாகி கிட்டத்தட்ட 75 வருட வரலாறு கொண்டதாக இருக்கின்றன. 1982 ஆம் ஆண்டு வரையில் இச் சங்கங்கள் தனித்தனி அமைப்புக்களாகவே செயற்பட்டு வந்துள்ளன. இந்த அமைப்புக்களின் வளர்ச்சிக்கு உற்ற துணையாக கூட்டுறவு வங்கியொன்று அமைக்கப்பட்டு துரித முன்னேற்றம் கண்ட காலத்தில் — அதாவது 1972 ஆம் ஆண்டில் — அரசாங்கத்தால் இவ் வங்கி மக்கள் வங்கிக்கு உடைமையாக்கப்பட்டுவிட்டது. இந்த எதிர்பாரா இழப்பினால் பாதிப்புற்ற இச் சங்கங்களுக்கு நிதி உதவி வழங்க வேறு எந்த அமைப்பும் முன்வராததினால் இச் சங்கங்கள் வீழ்ச்சி நிலைக்குத் தள்ளப் பட்டன. இந்த வீழ்ச்சி நிலையில் இருந்து சங்கங்களைக் காத்து, வளர்க்கும் நல் நோக்குடன் சில கூட்டுறவாளர்கள் முன் வந்து யாழ்ப்பாண மாவட்ட சி. க. கூ. சங்கங்களின் சமாசத்தை உதயமாக்கி, 1982 ஆம் ஆண்டில் அதனைப் பதிவு செய்து செயற்படுத்தி வந்தனர். அக் காலம் தொடக்கம் சங்க அங்கத்தவரிடம் ரூ. 10/- வீதம் மாதாந்த சேமிப்பாக நிதி திரட்டப்பட்டு வந்தது.

சிறுதுளி பெருவெள்ளம்

சிறுதுளி பெருவெள்ளம் என்ற வாக்கியத்துக்கு அமைவாகவும், சிக்கனமாகவும் சிறுகச் சிறுக சேகரிக்கப்பட்ட பணம் பெருவெள்ளம் போல் திரண்டுள்ளதை இன்று நாம் காணக் கூடியதாக உள்ளது.

இவ்வாறு 10 ஆண்டுகளில் திரட்டப்பட்ட நிதி இன்று பல்லாயிரம் மக்களின் நிதி உதவித் தேவைகளைப் பூர்த்தி செய்வதாக உள்ளதுடன் பல்லாயிரம் பேருக்கு சுய தொழில் புரியும் வாய்ப்பினை வழங்கக் கூடிய நிலையை உருவாக்கி உள்ளது. அது மட்டுமல்லாமல் அதன் அங்கத்தவர்களுக்கு பலவகைச் சேவைகளையும் ஆற்றக் கூடிய கட்டத்தையும் அடைந்துள்ளது.

இவ்வாறு யாழ். மாவட்டத்தில் தனது அங்கத்தவர்களுக்குச் சேவையாற்றி வரும் யாழ். மாவட்ட சி. க. கூ. சங்கங்களின் சமாசமானது 10 ஆவது ஆண்டு நிறைவு தினத்தை இன்று கொண்டாடுகின்றது. அள்ள அள்ள வற்றாத அமுதசுரபி போல் தனது அங்கத்தவர்களுக்கு உகந்து அளிக்கும் இச் சமாசத்தின் வளர்ச்சிப் பணியை வாழ்த்துவதில் மகிழ்கின்றோம்; பூரிப்படைகின்றோம்.

1982 ஆம் ஆண்டு பங்குனி மாதம் 2 ஆம் திகதி யாழ். மாவட்ட ஐக்கிய நாணய சங்கங்களின் சமாசமாக, அக் காலத்தில் கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளராகக் கடமையாற்றி வரும் சமாசத்தின் ஸ்தாபகருமாகிய அமரர் திரு. ச. ஞானப் பிரகாசம் அவர்களால் பதிவு செய்யப்பட்டது.

இச் சமாசத்தின் ஆரம்ப காலத் தலைவராக திரு. வி. கே. சுப்பிரமணியம் அவர்களும், உப தலைவராக திருமதி வேத வல்லி கந்தையா அவர்களும், செயலாளராக திரு. இ. திருநாவுக்கரசு அவர்களும், பொருளாளராக திரு. டி. வி. எம். இராஜசிங்கம் அவர்களும் பணிபுரிந்து வந்தனர்.

அக் காலகட்டத்தில் 2,300 அங்கத்தவர்களுடைய 52 சங்கங்களே சமாசத்தில் அங்கம் வகித்தன.

ஆனால் இன்று கடந்த 10 ஆண்டு வளர்ச்சியில் 34 ஆயிரம் அங்கத்தவர்களை உள்ளடக்கிய, 460 சி. க. கூ. சங்கங்களை அங்கத்துவமாகக் கொண்ட சமாசமாகப் பிரகாசிப்பதுடன், பெருந்தொகையான

[கடைசி பத்தியைப் பார்க்க]

யாழ். மாவட்டத்தின்

சிறந்த கூட்டுறவு வங்கியாக
எதிர்காலத்தில் மிளிர்ந்து

இப் பிரதேசத்தின் மக்களுக்கு

மேலும்

நற்சேவை ஆற்ற வேண்டுமென்று

இன்று

10 ஆவது ஆண்டு தினத்தை கொண்டாடும்

யாழ். மாவட்ட சிக்கனக் கடன் வழங்கு கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்தினை

வாழ்த்துகிறோம்

1982 — **1992**

யாழ். மாவட்ட சிக்கன கடன் வழங்கு கூட்டுறவுச் சங்கங்களின்

பிராந்திய சபைகள்:

1. நெடுந்தீவு பிராந்திய சபை
2. வேலணை பிராந்திய சபை
3. ஊர்காவற்றுறை பிராந்திய சபை
4. சங்கானை பிராந்திய சபை
5. சண்டிலிப்பாய் பிராந்திய சபை
6. உடுவில் பிராந்திய சபை
7. தெல்லிப்பழை பிராந்திய சபை
8. யாழ்ப்பாணம் பிராந்திய சபை
9. நல்லூர் பிராந்திய சபை
10. கோப்பாய் பிராந்திய சபை
11. சாவகச்சேரி பிராந்திய சபை
12. கரவெட்டி பிராந்திய சபை
13. பருத்தித்துறை பிராந்திய சபை
14. வடமராட்சி கிழக்கு பிராந்திய சபை

சிக்கனமே சிறந்த செல்வம்

ஒருவர் எல்லோருக்காகவும்
எல்லோரும் ஒருவருக்காகவும்

முன்னணியில் செயற்படும் கூட்டுறவு இயக்கம்

கூட்டுறவு இயக்கம் ஐக்கிய நாணய சங்கங்களின் தோற்றத்துடன் எமது நாட்டில் வேரூன்றத் தொடங்கியது. நாட்டில் ஏற்பட்ட பொருளாதார சமூக அரசியல் காரணிகளால் காலத்திற்குக் காலம் கூட்டுறவு இயக்கத்தின் அமைப்பு முறையில் பல்வேறு மாற்றங்கள் ஏற்பட்டன. இம் மாற்றங்கள் கூட்டுறவு இயக்கத்தில் தாக்கத்தை ஏற்படுத்திய போதிலும், நாட்டின் சமூக, பொருளாதார மேம்பாட்டில் இன்றும் கூட்டுறவுக்கு ஒரு தனியிடம் இருந்து வருவதை மறுக்க முடியாது. இந்த நிலைமை யாழ். மாவட்டத்திற்கும் பொருத்தமுடையதாகும்.

யாழ். மாவட்டத்திற்கு கூட்டுறவு இயக்கம் பல துறைகளில் வியாபித்து முன்னணியிற் செயற்பட்டுள்ளது. இதற்கான முக்கிய காரணம் கிராமிய மட்டத்தில் உருவாக்கப்பட்ட ஐக்கிய நாணய சங்கங்களும் மற்றும் அச் சங்கங்கள் மூலம் அறிமுகப்படுத்தப்பட்ட கூட்டுறவாளர்களும் ஆவர்.

யாழ். மாவட்டத்தில் எண்ணூறுக்கும் அதிகமான ஐக்கிய நாணய சங்கங்களும், சிக்கன கடன் வழங்கு கூட்டுறவுச் சங்கங்களும் இருக்கின்றன. இச்சங்கங்கள் யாவற்றையும் பாராமரிக்கும், மேற்பார்வை செய்யும் தாய்ச் சங்கமாக யாழ்ப்பாண மாவட்டச் சிக்கன கடன் வழங்கு கூட்டுறவுச் சங்க சமாசம் இருந்து வருகின்றது. இச் சமாசம் 1982-03-02 திகதியில் பதிவு செய்யப்பட்டது. தற்போது 450 அங்கத்துவ சங்கங்கள் இச் சமாசம் மூலம் பல்வகைக் கடன் திட்டங்களின் கீழ் அங்கத்தவர்களுக்குக் கடன் வசதிகளைச் செய்து கொடுப்பதுடன், கிராமிய மட்டத்தில் சேமிப்புத் திட்டத்தை உருவாக்கி அமுல் படுத்தும் நிறுவனங்களாகவும் செயற்பட்டு வருகின்றன. கிராமிய மக்களிடையே சேமிப்புப் பழக்கத்தையும், கூட்டுறவு மீதான நம்பிக்கையையும் ஊட்டுமுகமாகப் பலவகைப் பயிற்சிகளையும், கருத்தரங்குகளையும் அதன் வெளிக்கள உத்தியோகத்தர் மூலமாக அமுல்படுத்துவதன் மூலம் கூட்டுறவு இயக்கம் மேலும் விரிவடைவதற்கான ஒரு வேலைத் திட்டத்தை அமுலாக்கி வருகின்றது.

இன்று பத்தாவது நிறைவு ஆண்டைக் கொண்டாடவுள்ள இத் தருணத்தில் இச் சமாசம் தொடர்ந்தும் பல்வகை அபிவிருத்தித் திட்டங்களில் ஈடுபட்டு, எமது மக்களுக்குச் சிறப்புச் சேவையாற்ற வேண்டுமெனக் கேட்டுக் கொள்வதுடன், சமாசத்தின் எல்லா அபிவிருத்தி முயற்சிகளும் திறம்பட நடக்க வேண்டுமெனப் பிரார்த்திக்கின்றேன்.

செ. லிங்கநாதன்,
கூ. அ.உ. ஆணையாளர் (அபி.),
யாழ். மாவட்டம்.

ஒரு தசாப்த....

(முன் பத்தியின் தொடர்ச்சி)

மூலதனத்தையும் கொண்டு அறுகுபோல் வேரூன்றி ஆல் போல் தழைத்து வளர்ந்து பல்லாயிரம் மக்கள் அதன் நிழலில் சுகத்தைச் சுகிக்க உதவும் பெரும் விருட்சமாகி உள்ளது.

சமாசத்தின் நோக்கம்

கூட்டுறவுக் கோட்பாடுகளுக்கிணங்க அதன் உறுப்பினர்களுக்கு ஏற்ற பொருளாதார, சமூக, கலாசார தேவைகளை

[5 ஆம் பக்கம் பார்க்க]

[விளம்பர இல. சி-1566]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சின்னஞ்சிறு விளம்பரம்

விற்பனைக்கு

ஆங்கீரச வருஷ இ. சி. இரகுநாதையரின் வாக்கிய பஞ்சாங்கம் வெளிவந்து விற்பனையாகிக்கொண்டு இருக்கிறது. 1992/1993க்கானது. வியாபாரிகளுக்கு விசேட கழிவு வழங்கப்படும். யாழ்ப்பாணத்தில் விற்பனையாளர்கள்; பூபாலசிங்கம் புத்தகசாலை, 255, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம். [சி-1619]

மீண்டும் ஆட்டா மா விற்பனைக்கு வந்துள்ளது. அண்ணா கோப்பிக் கடை, 4, நவீன சந்தை, யாழ்ப்பாணம். [சி-1630]

தவறிவிட்டது

இ. சந்திரசேகரன் என்பவரது பாஸ் முதலிய முக்கிய ஆவணங்களும், உடுப்புகளும் அடங்கிய பை 28-2-92 இல் ஊரியான் - யாழ் பாதையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து ஆவணங்களை யாவது மலர் வாசம், ஏழாலை மேற்கு, சுன்னாகம் எனும் முகவரிக்கு அனுப்பி வைக்கவும். [5091]

தேவை

ஆச்சிரமத்தின் பாவனைக்கு 20 லெவல் (Level) சீட்டுக்கள் தேவை. ஸ்ரீசாரதா சேவாச்சிரமம், பருத்தித்துறை. (சி/1569)

மணமகன் தேவை

யாழ்ப்பாண இந்து, 32 வயது உதயத்துச் செவ்வாயுள்ள அரசாங்க உத்தியோக மணப்பெண்ணுக்கு பெற்றோர் மணமகனைத் தேடுகின்றனர். நட்சத்திரம் உத்தராடம், பாவம் 45, மங்கள ஏஜென்சி, கொய்யாத்தோட்டம், யாழ்ப்பாணம். [19915]

நாடக நூல்

200 வானொலி நாடகங்களும், 22 மேடை நாடகங்களும் எழுதிய அராலியூர் ந. சுந்தரம்பிள்ளையின் சாகித்திய மண்டலப் பரிசு பெற்ற நாடகநூல், முதலாம்பிள்ளை 30/-. 10 வானொலி நாடகங்கள். (19835)

சக்தி சரவணா

உங்கள் பிரச்சினை எதுவாயினும் உடனடியாகத் தீர்வு காண்பதற்கு மட்டக்களப்பு பரம்பரை சோதிட மாந்திரீக நிபுணரைக் கலந்தாலோசியுங்கள். ''சக்தி சரவணா'', 210, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். [யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி மைதானம் முன்பாக] தினசரி பகல் 9 மணி தொடக்கம் 3 மணி வரை சந்திக்கலாம். வியாழன் விடுமுறை. [5077]

சோதிடம்

கல்வியில் சித்தியா? உத்தியோகம் கிடைக்குமா? வியாபாரம் விருத்தியாகுமா? விவாகம் நடைபெறுமா? உங்கள் வினாக்கள் எதுவாயினும் உரிய பதில் உடனே கிடைக்கும். ஜாதகம், குறிப்பு, கைரேகை, எண் விஞ்ஞானம், சாமுத்திரிகா லட்சணம் ஆகியவற்றின் துணையுடன் பதில் கூறப்படும். தொடர்பு: த. சிவானந்தன், பிரபல சோதிடர், 384, கோவில் வீதி, நல்லூர் வடக்கு. [19884]

ஓம் ஸ்ரீ சாயிராம்

மூன்றாம் ஆண்டு நினைவஞ்சலி

Raosahib
Sinnathamby Sivapragasam
(Siva)
(Textile Technologist)

அன்னை மடியில்: 02—08—1933
ஆண்டவன் அடியில்: 05—03—1989

அன்பே! சிவா, உங்கள் தோற்றம் தான் மறைந்ததே ஒழிய, உங்கள் ஆத்மா சாயீசனோடு இரண்டறக் கலந்துவிட்டதே! பிரமாண்டநாயகன் சாயிசிவனின் ஜோதியில் உங்கள் ஜீவாத்மா ஜக்கியமாகி பரமானந்தம் அடைய அன்பு இதயங்களால் பிரார்த்திக்கின்றோம்.

மனைவி மற்றும் உறவினர்கள்.

கல்லூரி ஒழுங்கை,
கொக்குவில் கிழக்கு,
கொக்குவில்.

ஓம் சாந்தி! சாந்தி!!
'ஜெய்சாயிராம்'

(19910)

---

2 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர் வைத்திலிங்கம் இரத்தினம்
[கட்டடப் பொறியியலாளரும், அரசாங்க ஒப்பந்தகாரரும்]

மலர்வு: 22 - 12 - 1935
உதிர்வு: 02 - 03 - 1990

திதி: 10 - 03 - 1992

அன்பின் உறைவிடமே!
பாசத்தின் பிறப்பிடமே!
ஒரு நொடிப் பொழுதில் மறைந்திட்டாய்,
எம் ஆசை எண்ணங்களை தகர்த்திட்டாய்,
ஆண்டுகள் இரண்டோடி மறைந்தாலும்,
எமது வாழ்வில் ஒளியேற்றி வந்த தெய்வமே!
உமை என்றும் மறவோம்.

உங்கள் பிரிவால் துயருறும்:
மனைவி, பிள்ளைகள்.

''கிருஷ்ண விகார்'',
காங்கேசன்துறை வீதி,
தெல்லிப்பழை.

[5081]

SPOKEN ENGLISH
With
GRAMMAR

சனி, ஞாயிறு } 10-30

Mr. M. A. HARI B. A., Dip - in - Eng.

ஆரம்பம்: 07-03-1992

BOND INSTITUTES,
58 A, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

[5089]

ஆண்டு 5 புலமைப் பரிசில் பரீட்சை - 1991
இப் பரீட்சைக்கான

பயிற்சிப் பரீட்சைகள்

பங்குனி மாதத்தின் ஒவ்வொரு
ஞாயிற்றுக்கிழமையும் பிறபகல் 1-00 மணிக்கு
இந்நிறுவனங்களில் எம்மால் நடத்தப்படும்

1. யாழ்ப்பாணம் — Bond கல்வி நிறுவனம் - யாழ்ப்பாணம்
2. இருபாலை — Express Institute - இருபாலை
3. ஆவரங்கால் — குகன் கல்வி நிறுவனம்- ஆவரங்கால்
4. வடமராட்சி — சதா பொன்ஸ் - அல்வாய்
5. தென்மராட்சி — Brilliant கல்வி நிறுவனம்- சங்கத்தானை
6. சுன்னாகம் — வினைல்ஸ் - சுன்னாகம்
7. மானிப்பாய் — Bitsmans கல்வி நிறுவனம்- மானிப்பாய்
8. சித்தன்கேணி — பாரதி கல்வி நிறுவனம்- சித்தன்கேணி.

மேலதிக விவரங்களுக்கு:

BOND INSTITUTES,
58A, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

(5088)

---

31 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்

மலர்வு: 1914-06-14

உதிர்வு: 1992-02-01

அமரர்
சின்னையா நடராசா
(சின்னத்தம்பி)

''அவரின் ஒளியில் பயமின்றி அமைதியாய் உறங்குகிறேன். ஏனெனில், நான் அவரிற்குரியவன்''. அன்புத் தெய்வத்தை இன்றும், என்றும் நினைவு கூரும் இந்நாளில், அன்னாரின் ஈமக்கிரியைகளில் கலந்து கொள்பவர்களுக்கும், உதவி, ஒத்தாசை புரிந்தவர்களுக்கும் எமது நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம். இன்று (2-3-1992) திங்கட்கிழமை அன்னாரின் ஆத்மசாந்திக் கிரியையில் கலந்து கொள்ளுமாறு உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

உமது பிரிவால் துயருறும்:
மனைவி, பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

டயஸ் [வளாக] வீதி,
திருநெல்வேலி.

(19912)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாநகர சபை மண்டபம்
யாழ்ப்பாணம்

உதயன்

தாயை வெறுக்கும் ஆசிரியர்கள்!

தமிழ் மாவட்டங்கள் தவிர்ந்த ஏனைய மாவட்டங்களில் இருந்து இந்த வருட ஆரம்பத்தில் ஐந்து தமிழ் ஆசிரியர்கள் மட்டுமே யாழ்ப்பாணக் குடாநாட்டுக்கு இடமாற்றம் பெற்று வந்துள்ளார்கள்! யாழ்ப்பாணத்துக்கு இடமாற்றம் பெற விண்ணப்பித்தவர்களே அந்த ஐவரும் மட்டுந்தான்!!

சிங்களப் பகுதிகளில் பல ஆண்டுகள் பணிபுரிந்த போதிலும், அவை தங்களின் சொந்த மண் அல்ல; தமிழ் மண்ணே என்றும் சொந்த மண் என்ற சிந்தனை அவர்களுக்கு மட்டுமே இருந்திருக்கிறது. ஏனைய ஆயிரம், ஆயிரம் தமிழ் ஆசிரியர்களுக்குத் தாம் பிறந்த மண் சொந்த மண்ணாகத் தெரியவில்லை!

தமிழ்ப் பகுதிகளில் யுத்தம் தொடங்குவதற்கு முன்னர், குண்டு வீச்சும், பொருளாதாரத் தடையும் இந்த மண்ணில் இல்லாத போது, வெளி மாவட்டங்களில் பணிபுரிந்த தமிழ் ஆசிரியர்கள் தமது சொந்தப் பகுதிக்கு இடமாற்றம் பெற்று வருவதற்கு முண்டி அடித்தார்கள். கல்வி அமைச்சு அதிகாரிகளின் வீட்டுப் படிகளைக் கூட ஏறி இறங்கினார்கள்.

முதலாவது இடமாற்றப் பட்டியலில் பெயர் தவறிவிட்டால், "அப்பீல்" எழுதுவதற்குத் தொழிற்சங்கப் பிரமுகர்களுக்குப் பின்னால் திரிந்தார்கள். ஒன்றுக்குப் பல தடவைகள் முயற்சி செய்து எப்படியோ "சுழித்து" விடுவார்கள். ஜனவரியில் இல்லாவிட்டால் மார்ச், ஏப்ரலிலாவது விசேட இடமாற்றப் பட்டியலில் இடம்பிடித்து விடுவார்கள். அவ்வாறாக பல நூற்றுக் கணக்கான தமிழ் ஆசிரியர்கள் குடாநாட்டுக்கு இடமாற்றம் பெற்று வருவார்கள். இப்போது நிலைமை தலைகீழாகி விட்டது!

தாம் பிறந்த மண், சொந்த மண் ஆபத்தான நிலையில் இருப்பதால், கஷ்டங்கள் வசதியின்மைகள் நிறைந்த பூமியாக மாறியிருப்பதால் அதனை வெறுக்கிறார்கள். கிட்ட நெருங்க விரும்புகிறார்கள் இல்லை. தங்களைத் தாலாட்டி, சீராட்டி வளர்த்த தாய் நோயுற்றதால் அவளைத் தனது தாயே இல்லை என்று கூறும் பிள்ளைகளாக, மாறிவிட்டார்கள்!

தாம் பிறந்ததும், வளர்ந்ததும், பயின்றதும் இந்த அன்னை பூமியிலேயே என்பதை மறந்தவர்கள் ஆகி விட்டார்கள். தங்கள் சொந்த வசதிகளையும், நலன்களையும் மட்டுமே முன்னிறுத்தி சிங்களப் பிரதேசங்களில் தங்கியிருக்க முடிவு செய்துவிட்டார்கள்.

கஷ்டமும் கவலையும் நிரந்தரமானவை அல்ல. அழிவும், அனர்த்தமும் ஒருகால் ஓய்ந்து போக வேண்டியவையே. அயலான் வீட்டில் உண்ணும் பெரு விருந்தைவிட, சொந்த வீட்டில் குடிக்கும் கஞ்சி சுகமானது. எந்தக் கஷ்டம் வந்தாலும், தன்னைப் பெற்ற தாயைப் பேணிப் பாதுகாப்பது மனித வாழ்க்கையின் மகிமை—இவற்றை எல்லாம் உய்த்து உணராத வர்களை ஆசிரியர்கள் என்று சொல்வது எப்படி?

சொந்த மண்ணை மறந்து பேன இவர்கள் தற்போதைய யுத்தம் தணிந்து, இயல்பு நிலை திரும்பும்போது இங்கே இடமாற்றம் பெற்றுவர இடமளிக்கக் கூடாது. தமிழ்ப் பகுதிக்கென ஓர் அரசு அமையும் போது இவர்களை இங்கு பணி செய்ய அனுமதிக்கக் கூடாது. அதுவே இவர்களுக்கு வழங்கக் கூடிய தண்டனை.

அறிவியல், உளவியல் ரீதியாக சிறப்புகள் பெறும் சிவராத்திரி

இன்று மகா சிவராத்திரி நாள்.

சைவ சமயத்தவரின் முழு முதற் கடவுளாகிய சிவனுக்குரிய இரவாக இந்நாள் அனுஷ்டிக்கப்படுகிறது.

இன்று விரதமிருந்து, இன்றிரவு முழுவதும் விழித்திருந்து, இறைவழிபாட்டில் ஈடுபட்டால் கிடைத்தற்கரிய பேறுகள் கிடைக்கும் என்பது ஐதீகம். இதனை உணர்த்தும் பல புராணக் கதைகள் நமக்குத் தெரியும்.

புராண மற்றும் கர்ண பரம்பரைக் கதைகளினால் விசேடமாகக் கருதப்படும் இந்த சிவராத்திரி தினத்துக்கு மட்டும் ஏன் இந்த முக்கியத்துவம்?

இயற்கையோடு இயைந்த இந்துக்களின் வாழ்க்கை

இயற்கையோடு இயைந்து வாழ்ந்தவர்கள் இந்துக்கள். அவர்களின் வாழ்வும் வளமும் இயற்கையின் இயல்போடு இழையோடிச் செல்வதைக் காணமுடியும்.

வழிபாட்டுக்குரிய தினங்களாக விதிக்கப்பட்ட நாட்கள் ஒவ்வொன்றையும், ஒரு காரணத்துடனேயே அவர்கள் தெரிவு செய்திருக்கிறார்கள்.

தைப்பூசம், மாசிமகம், பங்குனி உத்தரம், சித்ரா பருவம், வைகாசி விசாகம், ஆனி உத்தரம், ஆடி அமாவாசை, ஆடிப்பூரம், ஆவணி ஞாயிறு, புரட்டாதிச் சனி, ஐப்பசி வெள்ளி, கார்த்திகைச் செவ்வாய், மார்கழி திருவாதிரை, மகா சிவராத்திரி, கிருஷ்ண ஜயந்தி போன்றவை இந்துக்களின் வழிபாட்டுத் தினங்களில் சிலவாகும்.

எல்லாத் தினங்களும் சூரியோதயத்துடன் தொடங்கி சூரியோதயத்துடன் முடிகின்றன. அப்படி இருக்கையில் நாட்களுக்கிடையில் ஏன் இந்த வேறுபாடுகள்?

- துளபகிரி சோதிடர் -

இந்த வழிபாடுகள்? — என்று எமக்குள்ளேயே நாம் கேட்பதுண்டு.

ஆனால் விஞ்ஞானிகள் கூட நாட்களுக்குள்ளே. மாதங்களுக்குள்ளே இயற்கைச் சூழ்நிலையில் வேறுபாடுகள் காணப்படுகின்றன என்பதை ஒப்புக் கொண்டிருக்கிறார்கள்.

இந்த விடயத்தில் இந்துக்களின் அறிவு முதிர்ச்சியைப் புகுகுரியது.

அவர்களின் அனேகமான வழிபாட்டுத் தினங்கள் கனத்த நாட்களாகும்.

கனத்த நாட்களில் வன்செயல்கள் அதிகரிப்பதும், மன நோயாளர்கள் பல்வேறு மனவியல் பாதிப்புகளுக்கு இலக்காவதும் நாம் எமது அனுபவத்தில்— சமூகத்தில்— கண்ட உண்மைகளாகும்.

இந்த கனத்த நாட்களில் மக்களின் மனதை இறைவழி பாட்டின்பால் - ஒழுக்க நெறிகளின்பால் - திருப்புவதன் மூலம் அழிவுகளை, வன்செயல்களைத் தவிர்த்து, சமூகத்தை ஒழுங்குபடுத்தும் நடவடிக்கைகளை இந்துக்கள் காலம்காலமாக செய்து வந்திருக்கிறார்கள் என்பதையே இந்த வழிபாட்டுத் தினங்கள் காட்டுகின்றன.

சோதிட ரீதியில் முக்கியத்துவம்

சிவராத்திரியும் இவ்வகையில் முக்கியமானதாகும். சோதிட ரீதியாகவும் இத்தினம் முக்கியம் பெறுகிறது.

மாசி மாதத்து அபரபட்சத்து சதுர்த்தசி திதியன்று சிவராத்திரி அனுஷ்டிக்கப்படுகிறது.

இந்த மாசி மாதத்திலேயே சூரிய பகவான், பரம்பொருளுக்கு உரிய கிரகமான — சனீஸ்வரனின் - ஆட்சி வீடான கும்ப இராசியில் இருந்து கொண்டு தனது சொந்த வீடான சிங்க இராசியை நோக்குகின்றார்.

சூரியன் சிவனுக்குரிய கிரகமாகையால், இந்த மாதம் முழுவதும் சூரியபகவான் [சிவபெருமான்] மிகப்பலம் பெற்றிருக்கும் காலமாகும்.

அதிலும் இம்மாத சதுர்த்தசி தினமான [14 ஆவது நாள்] இன்று சந்திரன் தனது கலைகளை இழந்து பலமற்று சூரியனை மிக அண்மித்து வருகின்ற இறுதி திதியாகும்.

மனிதனின் மதிய சந்திரன் ஆட்சி செய்கிறான் என்பது அன்று மெய்ஞ்ஞானிகள் கண்ட உண்மையாகும். இதை இன்று விஞ்ஞானமும் ஒப்புக் கொள்கிறது.

மதி தனது கலைகளை இழந்து பலமற்று சிவனாகிய சூரியனை மிக அண்மித்து வரும் இந்தத் தினத்தில், நாமும் எம்மனதை இறைவழிபாட்டில் செலுத்தினால் எமது அகந்தை இழந்து எம் மதி நிம்மதியாகும்.

எனவே அறிவியல் ரீதியாகவும், உளவியல் ரீதியாகவும் இறைவழிபாட்டிற்குரிய நாளான இத்தினத்தில் எம் மதியை நெறிப்படுத்தி நிம் மதி வாழ்வை அடைவோமாக! ★

சிவராத்திரி தின நிகழ்ச்சிகள்

யாழ்ப்பாணம், மார்ச் 2

சிவராத்திரி தினத்தையொட்டி இன்று சைவாலயங்களிலும் ஏனைய இடங்களிலும் நடைபெறவுள்ள சிறப்பு நிகழ்ச்சிகள் வருமாறு:-

★ சிவராத்திரியை முன்னிட்டு தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்காதேவி ஆலயத்தில் காலை 9-30 மணி தொடக்கம் சைவசமய தீட்சை கொடுக்கும் வைபவம் இடம்பெறும்.

★ தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி சைவ வளர்ச்சிக் கழகம் ஏற்பாடு செய்

[6 ஆம் பக்கம் பார்க்க]

ஒரு தசாப்த நிறைவு...

(3ஆம் பக்கத் தொடர்ச்சி)

நிறைவு செய்வது, உறுப்பினர்களுக்கிடையில் சிக்கனம் இருவயினொத்த உதவி, தன்னுதவி தொடர்பாக கருத்துக்களையும் பிரயோகத்தையும் விருத்தி செய்வது, உறுப்புரிமைச் சங்கங்களின் நடவடிக்கைகளை இலகுவாக்குவது, உறுப்புரிமைச் சங்கங்களின் நோக்கங்களை நிறைவேற்றுவதற்கு வேண்டிய உதவிகளைச் செய்வது. உறுப்புரிமைச் சங்கங்களின் ஒருமித்த கருத்துக்களை வெளியிடுவதற்கு வழிவகைகளை ஏற்படுத்தி கொடுப்பது, உறுப்புரிமைச் சங்கங்களின் நோக்கங்களை நிறைவேற்றுவதற்கு வேண்டிய வியாபார நடவடிக்கையில் ஈடுபடுதல், கூட்டுறவுச் சட்டத்திற்கும், விதிகளுக்கும், சமாசத் துணைவிதிக்கும், அமைவாக மாவட்டத்தின் நானாவித அபிவிருத்தி நடவடிக்கைகளில் உறுப்புரிமைச் சங்கங்களை பிரதிநிதிப்படுத்துவது, அதனூடே ஒரு கூட்டுறவுச் சமூகத்தினை உருவாக்குவது— ஆகியன யாழ். மாவட்ட சி. க. கூ. சங்கங்கள் சமாசத்தின் நோக்கமாகும்.

சிக்கனமே சிறந்த செல்வம் என்னும் விருது வாக்கியத்தைக் கொண்ட யாழ்ப்பாண மாவட்ட சி. க. கூ. சங்கங்களின் சமாசம், தன்னது அங்கத்தவர்களிடையே சேமிப்பு பழக்க வழக்கத்தை ஊக்குவித்து, அத்தகைய சேமிப்பினால் திரட்டிய நிதியிலிருந்து அங்கத்தவர்களின் தொழில் வாய்ப்பிற்கும், வருவாய்க்கும் வேண்டிய மூலதனத்தைப் பெற்றுக் கொள்ள இலகு கடன் அடிப்படையில் அவர்களுக்கு கடன் வழங்கி, அவர்களுக்கென ஒரு சுய தொழில் வாய்ப்பினை உருவாக்குகிறது. அத் தொழில் வாய்ப்பின் மூலம் கிடைக்கப் பெறும் வருமானத்தினால் கடனை சிறுக சிறுக அடைக்கவும், அவரின் வாழ்க்கைத் தரத்தை அதிகரிக்கவும், உதவிபுரிந்து, அதனூடே ஒரு கிராம மட்டத்தில் சிறுவர்கள் அமைப்பையும் உருவாக்கி அதன் மூலமும் அங்கத்தவர்களுக்கு வேலைவாய்ப்பினையும் வழங்கி வந்துள்ளது.

மக்களுக்காக மக்களினால் ஆரம்பிக்கப்பட்ட சி. க. கூ. சங்கங்களின் வங்கி அமைப்பு இன்று மக்களுடனேயே ஒன்றிணைந்து, மக்களுக்கே அதன் நற்சேவையை மேற்கொள்கின்றது.

யாழ். மாவட்டத்தில் இன்று 30 கிராமிய சி. க. கூ. சங்கங்களின் வங்கி அமைப்புக்கள் செயற்பட்டு வருகின்றன.

இவ்வாறு சி. க. கூ. சங்கங்களின் சமாசமானது நல் வளர்ச்சி அடைந்ததற்கு அதன் ஸ்தாபகர் அமரர் திரு. ச. ஞானப்பிரகாசம் அவர்களும், திருமதி வேதவல்லி கந்தையா அவர்களும் மற்றும் ஆரம்ப காலம் தொடக்கம் இன்று வரை இயங்கி வந்த இயக்குனர் சபைகளும் சி. க. கூ. சங்கங்களின் ஒத்துழைப்பும் சமாசத்தில் கடமையாற்றிய ஊழியர்களின் அயராத சேவை மனப்பான்மையுள்ள உழைப்புமே என்று கூறினும் அவை மிகையாகாது.

பல வழிகளில் நிதி உதவி

சமாசமானது தன்னது வளர்ச்சிக்கேற்ப அங்கத்தவர்களுக்குத் தேவையெனக் கருதும் பல பல திட்டங்களை உருவாக்கி அதன் மூலம் அங்கத்தவர்களுக்கு நிதி உதவியும் புரிந்து வருகின்றது.

சாதாரண கடன், சுயமுயற்சிக் கடன், விவசாயக் கடன், திட்டக் கடன், உயர் கல்விக் கடன், விதவைகள் கடன், வறிய மக்கள் கடன், வெளிநாட்டுக் கடன் (HIVOS), வியாபாரக் கடன், வீடமைப்புக் கடன், குறுகிய காலக் கடன், பண்டிகைக் கடன் எனப் பலவழிகள் வாயிலாக கடன்களை வழங்குகின்றது.

இவ்வாறான நிதிகளை வழங்குவதற்கு சமாசம் பின்வரும் வழிகள் மூலம் நிதிகளைத் திரட்டி வருகின்றது:-

மாதாந்த சேமிப்புத் திட்டம், நிலையான வைப்புத் திட்டம், மாணவர் சேமிப்புத் திட்டம், தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையிடமிருந்து பெறப்படும் கடன் திட்டம், "கீவோஸ்" எனப்படும் நெதர்லாந்து நிறுவனத்திடமிருந்து இலங்கை சிக்கன கடன் வழங்கு கூட்டுறவுச் சங்க சம்மேளனத்தின் மூலம் பெறப்பட்ட நிதி ஆகியவை.

இவற்றோடு மட்டும் நின்று விடாது மரணசகாயநிதித் திட்டம் மூலமும் அங்கத்தவரிடமிருந்து மாதாந்த சந்தாவாகசிறு தொகையைப்பெற்று இழப்பு ஏற்படும் சந்தர்ப்பத்தில் அவரின் பின் உரித்தாளிக்கு நன்கொடை வழங்கும் திட்டமும் செயற்படுத்தப்படுகின்றது.

மேலும் தனித்துநிதிதிரட்டுவதோடல்லாமல் அங்கத்தவர்களுக்கு வேண்டிய கூட்டுறவுக் கல்வியும், பொருளாளர் பயிற்சியும், தலைமைத்துவ பயிற்சிகளும், மாற்று முகவர் பயிற்சிகளும், மகளிருக்கான பயிற்சிகளும், சமாச கல்வி விஸ்தரிப்பு நடவடிக்கைகள் மூலம் மேற்கொள்ளப்படுகின்றன.

எமது பிரதேசத்தில் இலை மறைகாயாக இருக்கும் கலைகளை வெளிக்கொணர்ந்து வந்து, பிரபல்யப்படுத்தும் வசதிகள் சங்கங்கள் மூலமும், பிராந்திய சபைகள் மூலமும், யாழ் மாவட்ட சமாசத்தின் மூலமும் தவறாது மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

சி. க. கூ. சங்க அமைப்பானது தனி நபர் ஒருவருடன் தொடங்கி உலக ரீதியான அமைப்பு வரையில் தொடர்புடைய விரிவாக்கம் கொண்டதாகும் இச்சங்கிலித் தொடர் தனிநபர், சி. க. கூ சங்கம், சங்கங்களின் கொத்தணி அமைப்பு, பிராந்திய சபை அமைப்பு, மாவட்ட சமாசம், தேசிய மட்ட சம்மேளனம், ஆசிய கடன் வழங்கு கூட்டு சம்மேளனம் [ACCU]. உலக கடன் வழங்கு சபை [WOCCU] என்ற கோர்வையில் இணைக்கப்பட்டுள்ளது.

சமாசத்தின் அமைப்பு

யாழ் மாவட்டத்தில் சமாசத்தின் உள் அமைப்பாக தற்போது 44 கொத்தணி அமைப்புகளும், 14 உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளில் 14 பிராந்தியசபைகளும் உள்ளன. இந்த சமாசத்தின் இயக்குனர் சபையாக ஒவ்வோர் உதவி அரசாங்க அதிபர் பிரிவிலும் ஒவ்வொருவர் தெரிவுசெய்யப்பட்டும் ஒருவர் மாவட்ட ரீதியில் பொதுப் பிரதிநிதியாகவும் தெரிவு செய்யப்பட்டும் மொத்தம் 15இயக்குனர்களைக்கொண்ட சபையாகச் செயற்படுகின்றது.

இச்சபையில் தற்போது திரு. ச. முருகநேசன் அவர்கள் தலைவராகவும், திரு. க. மகாதேவன் அவர்கள் உப தலைவராகவும் நற்பணியாற்றி வருகின்றனர். இவர்களின் காலத்தில் சமாசம் நிர்ணயித்த இலக்குகளை வெற்றிகரமாகவும், போற்றப்படும் தன்மையிலும் அடைந்து வீறுநடை போடுகின்றது. இந்த மேன்மையில் சமாசத்தில் தங்களை அர்ப்பணித்து கடமையாற்றும் உத்தியோகத்தர்களினது பங்களிப்பும் குறிப்பிடத்தக்கதாகும்.

மேலும் எதிர்கால வளர்ச்சிக்கென ஊழியர்களின் பணியுடன், 44 மாற்று முகவர்கள் என்னும் தொண்டர்களின் செயற்பாட்டினாலும் ஆயிரக்கணக்கான சி. க. கூ. சங்க கௌரவ சேவையாளர்களின் அயராத உழைப்பினாலும் விரைவில் அமரர் திரு. ச. ஞானப்பிரகாசம் அவர்களின் கனவின் கனியாக யாழ். மாவட்ட சி. க. கூ. சங்க சமாசமானது யாழ். மாவட்டத்தில் நற்பயன் அளிக்கும் சிறந்த கூட்டுறவு வங்கியாக உதயமாகி பிரகாசிக்கும் என்பதில் எள்ளளவும் ஐயமில்லை.

ஒரு தசாப்த கால நிறைவில் சிறப்பான சேவையாற்றி பெருமை பெறும் இந்த நற்பணி மேன்மேலும் நானிலம் போற்ற, ஞாலம் மீது நலிவுறாத ஒளியாக ஞாயிறு போல் பிரகாசித்து வளர்ந்து நீடூழி வாழ வாழ்த்துகிறோம்.

அ. மை. இராஜகுமார்,
(பி. பி. ஏ.)
மாவட்டச் செயலாளர்,
யாழ். மாவட்ட சி. க. கூ.
சங்கங்களின் சமாசம்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

மரண அறிவித்தல்கள்

தோமா டானியேல்

காரைநகர் வலந்தலையைப் பிறப்பிடமாகக் கொண்ட தோமா டானியேல் [கொத்தணி அதிபர், ஏழாலை மத்திய மகா வித்தியாலயம்] 1-3-1992 இல் காலமாகிவிட்டார்.

அன்னார் தோமா, காலஞ்சென்ற மேரி [ஆசிரியர்] ஆகியோரின் அன்பு மகனும், இயேசுமலர் [ஆசிரியர், நவீல்ட் பாடசாலை, கைதடி] அவர்களின் அன்புக் கணவரும், கிறேஷியன் ஆனந்தன் [N.A.T., மொறட்டுவ], டொறத்தி மகிழினி [நுண்கலைப் பிரிவு, இராம நாதன் கல்லூரி] ஆகியோரின் அன்புத் தந்தையாரும், லூசி தோமா [இளைப்பாறிய மருத்துவத் தாதி], காலஞ்சென்ற நல்லையா [அதிபர்], ஜேக்கப் [Wireless Operator], தவமணி, ஞானமணி, றோகினி ஆகியோரின் சகோதரியும், துரைசிங்கம் [O.A., கல்வித் திணைக்களம்], நவநீத கிருஷ்ணன் [பொறியியலாளர், டோகா], பென்ஜமின் [A.D.D.S.I., திருகோணமலை], தாமோதர்ம்பிள்ளை [கணக்காளர்], சிவாம்பிகை [ஆசிரியர்], ஜெயமலர் [ஆசிரியர்], கிறிஸ்ரமெல் செல்லம், புஷ்பமலர் ஆகியோரின் மைத்துனரும், விக்டர் ஜெயக்குமார் [ஆசிரியர், யாழ்ப்பாணக் கல்லூரி], வின்சன்ராஜ்குமார் [தபாற்கந்தோர், சுழிபுரம்], விமலினி [மருந்தாளர்], நந்தினி, வில்லியம் சாந்தகுமார், மாலினி, நிமலன், நிரஞ்சன், யாழினி, சர்மினி ஆகியோரின் சிறிய தந்தையாரும், வசந்தி [ஜேர்மனி], மோகன் [லண்டன்], ஆனந்தி [ஆசிரியர்], மஞ்சுளா, ஞானசுதன் [மருத்துவபீடம், யாழ். பல்கலைக்கழகம்], ஞானரஞ்சன் [பொறியியல் பிரிவு, மொறட்டுவ], ஞானக்காருண்யன், நவந்தினி, தர்சினி ஆகியோரின் மாமனாரும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை 2-3-1992 திங்கட்கிழமை [இன்று] மாலை 3 மணிக்கு அன்னாரது இல்லத்தில் நடைபெறும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்களுக்கு அறியத்தருகிறோம்.

குறிப்பு :- அன்னாரின் பூதவுடல் காலை 11 மணிக்கு ஏழாலை மகா வித்தியாலயத்தில் வைக்கப் படும்.

தகவல்:
தந்தை, சகோதரிகள்
(19926)

மாகியப்பிட்டி,
சண்டிலிப்பாய்.

கந்தையா சிவசம்பு

சண்டிலிப்பாய் ஓய்வு பெற்ற உதவி அரச அதிபர் கந்தையா சிவசம்பு நேற்று ஞாயிறு அதிகாலைகால மானார்.

இவர் மனோன்மணியின் அன்புக் கணவரும், உதயராணி [ஜேர்மனி], உதயகுமார் [கனடா] ஆகியோரின் அன்புத் தந்தையும், கரணவாய் காலஞ் சென்ற கந்தையா – செல்லம்மா தம்பதியினரின் மூத்த புதல்வரும், காலஞ்சென்ற திலகவதி, நேசமணி, சரோஜினி. வினாயகமூர்த்தி [உடுப்பிட்டிப. நோ. கூ. சங்கம்], சந்திரா ஆகியோரின் அன்புச் சகோதரரும், க. குமாரசாமி [முன்னாள் இந்தியன் ஓவர்சீஸ் வங்கி], க. செல்வராசா, க. கமலராசா [லண்டன்] ஆகியோரின் மைத்துனரும், செங்குந்த இந்து மாணவிகள் க. றேணுகா, க. ராதிகா ஆகியோரின் மாமனாரு மாவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று [2-3-1992] திங்கட்கிழமை காலை 10.00 மணியளவில் திருநெல்வேலி இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் திருநெல்வேலி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்சுள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்;
திருமதி சி. மனோன்மணி

''உதய பவனம்'',
பத்திரகாளி கோவிலடி,
திருநெல்வேலி.
[19927]

திருமதி அருளம்மா இராசதுரை

கொக்குவில் கிழக்கைச் சேர்ந்த காலம்சென்ற சி. இராசதுரையின் [செல்வநாதன்-ஆனைக்கோட்டை] அன்பு மனைவி அருளம்மா [ராசாத்தி] அவர்கள் [01-03-92] நேற்று சிவபதமடைந்துவிட்டார்.

இவர் காலம்சென்ற E. S. S. செல்லத்துரை [கண்ணாடி], அன்னம்மா தம்பதியினரின் அருமைப் புதல்வியும், காலம்சென்ற திருமதி தம்பு கனகேஸ்வரியின் சுகோதரியும், இரத்தினகுமார், இராஜினி, ராகினி [ஆசிரியை, மானிப்பாய் மகளிர் கல்லூரி], அசோகன் [கனடா] ஆகியோரின் தாயாரும், கோபாலன், [கனடா], செல்வநாதன் [ஓமான்], சிவம் [கனடா] ஆகியோரின் மாமியாரும். சிந்துஜா, நிரோஜன், மிரிசுதன் ஆகியோரின் பேத்தியுமாவார்.

அன்னாரது பூதவுடல் தகனக்கிரியைக்காக இன்று [02-03-92] காலை 10 மணிக்கு அவரது இல்லத்தில் இருந்து கொக்குவில் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

தகவல்!
பிள்ளைசுள்

கலைவாணி லேன்,
கொக்குவில் கிழக்கு,
கொக்குவில்.
[19929]

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம், நாவலர் வீதி, 292/2 இலக்கத்தில் உள்ள அச்சகத்தில் 2-3-1992 இல் அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டது.

முன்னேற..

[1ஆம் பக்கத் தொடர்ச்சி]

களிலும் விமானப் படையினர் மேற் கொண் டு வரும் வான் தாக்குதல்களால் பொதுமக்களின் சொத்துக்களுக்கு பெரும் சேதம் ஏற்பட்டிருப்பதாகவும்—

ஏராளமான மக்கள் பாதுகாப்பான இடங்களை நோக்கி இடம்பெயர்ந்து வருகினறனர் எனவும் அங்கிருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவித்தன. [ஒ-5]

அம்பாறை..

[1ஆம் பக்கத் தொடர்ச்சி]

ஏற்பட்டுள்ளதாகவும், அவர்கள் என்ன செய்வது என்று தெரியாமல் திகைத்துப்போயுள்ளனர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

பெரும்பாலான தமிழ் அகதிகளின் குடியிருப்புக்கள் அழிக்கப்பட்டுவிட்டன. அவர்களது உடைமைகள் எல்லாம் சூறையாடப்பட்டுவிட்டன. இந்த நிலையில் அவர்கள் தமது கிராமங்களுக்குச் சென்று என்ன செய்ய முடியும் என்ற கேள்வி எழுந்துள்ளது.

இதேசமயம், சிங்கள, முஸ்லிம் ஊர்காவல் படையினரின் அடாவடித்தனங்கள் இன்னும் குறைந்துவிடவில்லை. இந்த நிலையில் எவ்வாறு நாம் வீடுகளுக்குச் செல்ல முடியும் என்று அகதிகள் சிலர் கேள்வி எழுப்பியுள்ளனர். [ஒ]

சிவராத்திரி...

[5 ஆம் பக்கத் தொடர்ச்சி]

துள்ள சிவராத்திரி விழா கல்லூரியின் சிவகாமி சமேத ஆனந்த நடராசர் ஆலயத்தில் நடைபெறும்.

★ கோண்டாவில் கிழக்கு அருள் மிகு பழங்கிணற்றடி ஸ்ரீ பாதாளவைரவர் கோவில் சிவராத்திரிவிழா மாலை 5-30 மணிக்கு விசேட அபிஷேக, பூசையுடன் ஆரம்பமாகும்.

★ தென்மராட்சி இந்து இளைஞர் மன்ற ஒன்றியத்தின் சிவராத்திரி விழா பிற்பகல் 3 மணிக்கு ஆரம்பமாகும்.

★ தென்மராட்சிப் பகுதியில் உசன் கந்தசுவாமி கோவில், கச்சாய் இலுப்பையடி பிள்ளையார் கோவில் ஆகியவற்றிலும் சிவராத்திரி விழா நடைபெறும்.

★ வழக்கம்பரை அம்மன் கோவிலில் சிவராத்திரியை முன்னிட்டு நான்கு சாம அபிஷேக பூசைகள் இடம் பெறும்.

★ சாவகக்சேரி திவ்விய ஜீவன சங்கத்தினர் இன்று மாலை முதல் மறு நாள் காலை வரை சிவராத்திரி தின திருப்பாத யாத்திரை ஒன்றை மேற்கொள்ள உள்ளனர்.

★ யாழ். ஈச்சமோட்டை, கலட்டிப்புலம் ஸ்ரீ ஞான வைரவர் கோவிலில் இன்று விசேட அபிஷேகங்களும் நான்கு சாமம் பூசையும் இடம் பெறும்.

★ ஏழாலை வசந்தபுரம் வசந்த நாகபூஷணி அம்மன் ஆலயத்தில் நான்கு சாமப் பூசை, அபிஷேகம் என்பவற்றுடன் மகாசிவராத்திரி பக்தி பூர்வமாகக் கொண்டாடப் படும்.

★ சாவகச்சேரி சந்திரசேகரர் வாரிவன நாதர் சிவன் கோவில் சிவராத்திரி விழாவில் கூட்டுப் பிரார்த்தனை, புராணபடனம், பஜனை ஆகிய இடம்பெறும்.

[த-28-30-31-51-75]

தேவை

தராதரம் உள்ள மருத்துவத் தாதி [Mid Wife] உடன் தேவை. விண்ணப்பத்துடன் நேரில் சமுகமளிக்கவும்.

வைத்திய அதிகாரி
மெதடிஸ்த வைத்தியசாலை,
புத்தூர்.
[சி-1572]

ஆஸி அணியிடம் இந்தியா ஓர் ஓட்டத்தில் தோல்வி!

பாக். அணி தப்பிப் பிழைத்தது

பிரிஸ்பேர்ண், மார்ச் 2

உலகக் கிண்ண கிரிக்கெட் போட்டித் தொடரில் நேற்று பிரிஸ்பேர்ணில் இடம்பெற்ற ஆட்டம் ஒன்றில் இந்திய அணி ஆஸ்திரேலிய அணியிடம் 1 ஓட்டத்தினால் தோல்வியடைந்தது.

வெற்றிபெற 47 ஓவர்களில் 236 ஓட்டங்களை எடுக்க வேண்டிய நிலையில் ஆடத் தொடங்கிய இந்திய அணி கடைசிப் பந்து வீச்சில் 234 ஓட்டங்களுக்கு சகலவிக்கெட்டுக்களையும் இழந்து ஆட்டத்தில் தோல்வியுற்றது.

இந்தியத் தரப்பில் நான்கு வீரர்கள் ''ரன் - அவுட்'' முறையில் ஆட்டமிழந்தனர். அணித் தலைவர் அஸாருதீன் 93 ஓட்டங்களைப் பெற்ற நிலையில் ''ரன் - அவுட்'' ஆனார்.

முதலில் ஆஸி அணி 50 ஓவர்களில் 238 ஓட்டங்களைப் பெற்றது. எனினும் மழை காரணமாக ஆட்ட நேரம் குறைக்கப்பட்டு இந்தியத் தரப்புக்கு 47 ஓவர்கள் வழங்குவது என முடிவாயிற்று.

இதனடிப்படையில் ஆஸித் தரப்புக்கு 3 ஓவர் குறைக்கப் பட்ட போது அந்த அணியின் ஓட்ட எண்ணிக்கை மூன்று ஓட்டங்களால் — 235 ஆக — குறைக்கப்பட்டது.

பாகிஸ்தானுக்கும் இங்கிலாந்துக்கும் இடையில் அடிலெய்டில் நடைபெற்ற மற்றைய ஆட்டத்தில் பாக். அணி மழை காரணமாகத் தப்பிப் பிழைத்தது.

முதலில் துடுப்பெடுத்தாடிய அந்த அணி 40.2 ஓவர்களில் 74 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்டுகளையும் இழந்தது.

பதிலளித்து துடுப்பெடுத்தாடிய இங்கிலாந்து அணி எட்டு ஓவர்களில் ஒரு விக்கெட் இழப்புக்கு 24 ஓட்டங்களைப் பெற்ற நிலையில் கடும் மழை காரணமாக ஆட்டம் இடை நடுவில் கைவிடப்பட்டது.

[உ-த]

இறைச்சிக்கடை மூடப்பட்டிருக்கும்

குருநகர், மார்ச் 2

குடாநாட்டில் இன்று இறைச்சிக் கடைகள் மூடப் பட்டிருக்கும் என்று யாழ். மாவட்ட இறைச்சிக் கடை வியாபாரிகள் சங்கம் அறிவித்துள்ளது [இ-51]

பூநகரியில் ஹெலி வேட்டு

யாழ்ப்பாணம், மார்ச் 2

பூநகரிப் பகுதியில் நேற்று அதிகாலை ஹெலி ஒன்று, கண்டபடி வேட்டுக்களைத் தீர்த்தது.

இதேசமயம் பூநகரி கல்முனைப் பகுதி இராணுவத்தினர் நேற்று நண்பகல் சரமாரியான துப்பாக்கிப் பிரயோகங்களை நடத்தினர்.

[ஒ-5]

ஜெனரேட்டர்..

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

பிரஸ்தாப இளைஞர் கையில் 'வயர்'களைப் பிடித்திருந்த தாகவும்—

கயிறு இழுக்கப்பட்டு ஜெனரேட்டர் இயங்கத் தொடங்கியதும் அவர் துடிதுடித்து வீழ்ந்ததாகவும்—

அவரை தனியார் ஆஸ்பத்திரி ஒன்றுக்கு எடுத்துச்சென்ற சமயம் உயிர் பிரிந்து விட்ட தாகவும் கூறப்பட்டது.

(ஒ)

உயர் கலைக் கல்லூரி

ஆனைப்பந்தி.

[கல்விப் பகுதியினரின் சட்டத்தின் கீழ் அங்கீகரிக்கப்பட்ட உதவி நன்கொடை பெறாத சிரேஷ்ட பாடசாலை]

ஏப்ரல் 1992 / 1993

பேராதனை பல்கலைக்கழகத்துக்கான

G. A. Q. - G. S. Q.

விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன

விண்ணப்ப முடிவு: 15—03—1992

தகைமை: G. C. E. A/L இல் 3 பாடம் சித்தி அடைந்தவர்களும், பயிற்றப்பட்ட ஆசிரியர்களும் விண்ணப்பிக்கலாம்.

முன்னுரிமை:- முதல் வரும் 100 மாணவர்களுக்கே அனுமதி வழங்கப்படும்.

பல்கலைக்கழக பதிவுகள் அனைத்தும் கல்லூரியினால் செய்து கொடுக்கப்படும்.

[சி-1628]

மரண அறிவித்தல்

மாணிக்கம் மனோகரன்

மணல்தறை ஒழுங்கை 47/7, ஐவசிப்பிடமாகக் கொண்ட மனோகரன் நேற்றிரவு அகாலமரணமானார்.

இவர் மாணிக்கம் [சோமு] பஞ்சவர்ணம் தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்ற மாலினியின் அன்புத் தம்பியும், விஜயலட்சுமி, பாமினி ஆகியோரின் அன்பு அண்ணனுமாவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று [2-3-92] மாலை 5 மணிக்கு கொக்குவில் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டு தகனம் செய்யப்படும். இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்

47/7 மணல்தறை ஒழுங்கை,
கந்தர்மடம்,
[19930]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org